*அழகிய மனமே!*
அக்கம் பக்கம் பாருங்க! அடுத்த கதை தேடுங்க!
வீட்டுக்குள்ளே இருந்துகிட்டு வேதனையில் சாகாம!
கத்தும் குயில் கத்துமே காதல் சொல்லிப் போகுமே!
அணில் கூட ஆடுமே! அங்க இங்க ஓடுமே!
நெல்லைக் கொறித்து திண்ணும் போது,
நிறைவாய்த்தான் அது இருக்குமே!

எலிகள் போடும் ஆட்டமும்,
எதிரிலொரு பூனை வர;
இல்லாமல் தான் போகுமே!

ஒன்றை யொன்று பார்த்துட்டு,
ஓடியே தான் ஒளிஞ்சாலும்;
சின்ன சின்ன பொழுதிலும்,
சிங்காரமாய்த்தான் மகிழுது!

உச்சிமரக் கிளையில் ஏறி,
ஒய்யாரமாய் ஆடும் போது,
சேட்டையாக குரங்கதுவும்;
சீண்டித்தானே பார்க்குது!

காசு பணம் சேர்க்கவென்று – அவை
காலம் தோறும் அலைவதில்லை!
கேடுகெட்ட மானிடா – அந்தக்
கீழ்மை செய்வதும் நீயடா!

இருப்பதிலே மகிழாமல்,
இல்லாததையே தேடிகிட்டு;
கழிப்பதுதான் வாழ்க்கையோ?

கூடுவிட்ட ஆவியோடு,
கூட்டிப் போக எதுதான் உண்டு?

ஆட்டம் போட்டு அலையாதே!
அடுத்தவனையும் சீண்டாதே!
இருப்பதிலே மகிழ்ச்சி கொண்டு,
எந்நாளுமே நீ வாழ்ந்திடு!
- *கவிவளவன்* 05-04-2022 (07.05 AM)